பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 09 2024 **SUNDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மகாராஷ்ட்ராவில் 11 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக தொடங்கிவைத்தார்.

2. ஜவுளித்துறையில் நவீன நூல் இழைகள் குறித்த கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி மேம்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் வலியுறுத்தியுள்ளார்.

3. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பீகார் மாநிலத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்துதரப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

4. ஜம்மு காஷ்மீரில் மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலை முடிவடைந்தது.

5. ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில், ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி - கேரள அணிகளுக்கு இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் 11 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக தொடங்கிவைத்தார்.

நிறைவுற்றத் திட்டங்களை தொடங்கிவைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் பேசிய பிரதமர், மாநிலத்தின் வளர்ச்சியில் புதிய அத்தியாயம் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சோலாபூரில் அமைக்கப்பட்டுள்ள புதிய விமான நிலையம், தொழில்துறைக்கும், சுற்றுலா போக்குவரத்திற்கும் உத்வேகம் அளிக்கும் என்று குறிப்பிட்டார்.

நகர்ப்புற வளர்ச்சியில் புனே போன்ற நகரங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்ட பிரதமர், இந்த நகரங்களின் மேம்பாட்டிற்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக கூறினார்.

**Bidkin**–ல் தொடங்கப்பட்டுள்ள தொழில்கள் அதிக அளவில் முதலீடுகளை ஈர்ப்பதோடு, புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்கித்தரும் என்று கூறினார்.

முதலீடுகள் மூலம், வேலைவாய்ப்புகள் உருவாவது மகாராஷ்ட்ராவின் பொருளாதாரத்திற்கு வலுசேர்க்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

நாட்டின் தொன்மை சிறப்புமிக்க பண்பாடு மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் தொழில்துறையை நவீனமயமாக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்திற்கு தேவையான உள்கட்டமைப்பை உருவாக்க வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்ட பிரதமர், பொருளாதார வளர்ச்சியின் பயன்கள் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் சமமாக சென்று சேர வேண்டும் என்று கூறினார்.

மகளிருக்கான தலைமைத்துவத்தை உறுதி செய்வதன் மூலம், சமூக மாற்றத்தை கொண்டுவர முடியும் என்று அவர் தெரிவித்தார்.

மகளிர் கல்வி மேம்பாட்டிற்காக அரும்பணி ஆற்றிய சாவித்ரி பாய் புலே- நினைவிடத்திற்கு காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டிய பிரதமர், மகளிரின் கல்வி மேம்பாட்டுக்கென அயராது பாடுபட்டவர் சாவித்ரி பாய் புலே என்று கூறினார்.

அவர் கொண்டுவந்த சமூக சீர்திருத்தங்கள் மூலம், அடுத்துவரும் சந்ததியினரும் பயன்பெற்று வருவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள நாரிசக்தி வந்தன் அதிநியம் சட்டம் மகளிரின் பாதுகாப்பை உறுதி செய்துள்ளதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<>>>>>

தூய்மை இந்தியா இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு அரும்பாடுபட்ட அனைவருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் 114-ஆவது நிகழ்ச்சியின் மூலம் நாட்டு மக்களிடையே உரையாற்றிய பிரதமர், கடந்த பத்தாண்டுகளாக மக்களிடையே தூய்மை இந்தியா இயக்கம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

நமது நாட்டின் தொன்மை சிறப்புமிக்க கலாச்சாரத்தின் சின்னங்களாக விளங்கும் படைப்புகளை மீட்டுக்கொண்டுவருவதற்கு மத்திய அரசு முழுவீச்சில் நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

தமது அமெரிக்க பயணத்தின்போது அந்நாட்டு அதிபர் திரு ஜோ பைடன், 300-க்கும் மேற்பட்ட இந்திய கலைப் பொருட்களை ஒப்படைத்திருப்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தி என்றும் பிரதமர் கூறினார்.

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

<<<<<>>>>>

பீகார் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்து மத்திய உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் இன்று பாட்னாவில் ஆய்வு மேற்கொண்டார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு பீகார் மாநில அரசு நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்துதரும் என்று அவர் கூறினார்.

தேசிய பேரிடர் மீட்புப்படையின் 11 குழுக்கள் மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பீகார் மாநில அரசுடன் மத்திய அரசு தொடர்ந்து வெள்ள நிலைமை குறித்து கேட்டறிந்து வருவதாகவும் அவர் கூறினார்.

வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்பதற்கும், நிவாரணப்பொருட்கள் வழங்குவதற்கும் விமானப்படையின் மீட்பு விமானங்கள் அனுப்பிவைக்கப்படும் என்றும் திரு நித்யானந்த ராய் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பிராண்டு இந்தியா இயக்கம், இந்திய தயாரிப்புகளுக்கு உலகளாவிய தரத்தையும், அங்கீகாரத்தையும் உறுதி செய்திருப்பதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று உற்பத்தியோடு இணைந்த சலுகைத்திட்டத்தில் பயன்பெறும் நிறுவனங்களின் தலைவர்களிடையே உரையாற்றிய அவர், உலகத்தரத்திலான தரமான பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.

இந்த நிறுவனங்களில் முதலீடுகள் அதிகரிக்கப்பட்டு, வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாக தெரிவித்த அமைச்சர், பல்வேறு துறைகளில் இறக்குமதியை குறைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கு மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவுக்கான தேர்தல் பிரச்சாரம் இன்று மாலை முடிவடைந்தது.

மூன்றாவது கட்டமாக நாளை மறுநாள் 40 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

பிஜேபி, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், ஜம்மு காஷ்மீர் மக்கள் மாநாட்டு கட்சி, அவாமி **Itihad** ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் களத்தில் உள்ளனர்.

இந்த தேர்தலில், 39 ஆயிரத்து 18 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வாக்களிக்க உள்ளனர்.

காலை ஏழு மணிமுதல், மாலை ஆறு மணிவரை நடைபெறும் இந்த தேர்தலுக்காக 5 ஆயிரத்து 60 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மகளிருக்கென 50 வாக்குச்சாவடிகளும், மாற்றுத்திறனாளிகளுக்கென 43 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

<<<<<>>>>>

ஜவுளித்துறையில் ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் இருப்பதால், அதனை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் முனைப்புடன் செயல்படுத்தப்பட வேண்டும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் வலியுறுத்தியுள்ளார்.

பாட்னாவில் உள்ள தேசிய ஜவுளி மற்றும் ஆடைவடிவமைப்பு கல்லூரி மாணவர்களிடையே உரையாற்றிய அவர், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

கார்பன் மற்றும் டெக்னிக்கல் ஃபைபர் துறைகளில் மேற்கொள்ளப்படும் புதிய முயற்சிகள் அதிக அளவில் அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் என்று அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் ஏரோ ஸ்பேஸ் துறைகளில் கார்பன் நூல் இழைகள் அதிக அளவில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

ஜவுளித்துறையில் புதிய கண்டுபிடிப்புகளுக்காக பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜவுளித்துறையில் 157 புத்தாக்க தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜவுளித்துறையை 350 பில்லியன் டாலர் அளவிற்கு உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாகவும் திரு கிரிராஜ் சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழக அமைச்சரவையில் நான்கு புதிய அமைச்சர்கள் இன்று பதவியேற்றுக்கொண்டனர்.

சென்னை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திரு. செந்தில் பாலாஜி, டாக்டர் கோவி. செழியன், திரு. ராஜேந்திரன், திரு. நாசர் ஆகியோருக்கு ஆளுநர் திரு ஆர் என் ரவி, பதவி பிரமாணமும், ரகசிய காப்புறுதியும் செய்துவைத்தார்.

முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் முன்னிலையில் அவர்கள் பதவியேற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் மற்றும் மாநில அமைச்சர்கள், உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

திரு செந்தில் பாலாஜிக்கு, மின்சாரம், மதுவிலக்கு, துறையும், திரு கோவி செழியனுக்கு, உயர்கல்வித்துறையும், திரு ஆர் ராஜேந்திரனுக்கு சுற்றுலா துறையும், திரு நாசருக்கு, சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறையும் அளிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு கா. ராமச்சந்திரன் அரசின் தலைமை கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

இஸ்ரேல் நடத்திய விமான தாக்குதலில், ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய படைத்தளபதி **Nabil Qaouk** பெய்ரூட்டில் நேற்றிரவு கொல்லப்பட்டதாக அந்நாட்டு ராணுவம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக இன்று வெளியிடப்பட்ட சமூக வலைதள பதிவில், இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில், ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி, கேரள அணியை எதிர்கொள்கிறது.

குவஹாத்தியில் நடைபெறும் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

--------

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றும் மழை பாதிப்பு காரணமாக ரத்து செய்யப்பட்டது.

கான்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக ரத்து செய்யப்பட்டது.

முதல் நாளில், பங்களாதேஷ் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 107 ரன் எடுத்திருந்த நிலையில், மழை குறுக்கிட்டதன் காரணமாக ஆட்டம் முன்கூட்டியே முடித்துக் கொள்ளப்பட்டது.

<<<<<END>>>>>